செ.வெ.எண்:05 நாள்:03.05.2020

கரூர் மாவட்டம்

**வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து கரூர் மாவட்டத்திற்கு வருகை தருவோர் குறித்த விவரங்களை பொதுமக்கள் 04324-1077 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தகவல்**

கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையிலும், சுகாதாரத்துறையின் வழிகாட்டுதலின்படியும் கரூர் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

துவக்கத்தில் 42 நபர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மருத்துவர்களின் தொடர் சிகிச்சையால் அனைவரும் பூரண குணமடைந்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது சென்னையில் இருந்து கரூர் வந்த ஒரு நபருக்கு கொரோனோ தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டு, அவர் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சையில் உள்ளார்.

கரூர் மாவட்டத்தை கொரோனா தொற்று இல்லாத மாவட்டமாக மாற்ற சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை, காவல்துறை என அனைத்துத்துறை அலுவலர்களும் தங்கள் உயிரை பணயம் வைத்து, பொதுமக்களின் உயிரைக்காக்க களத்தில் முன்நின்று பணியாற்றி வருகின்றார்கள்.

கொரேனா தொற்று பரவலை தடுக்க பொதுமக்களின் பங்கும் இன்றியமையாதது. எனவே, சென்னை உள்ளிட்ட வெளி மாவட்டங்களில் இருந்தோ, அல்லது வெளி மாநிலங்களில் இருந்தோ எவரேனும் தங்கள் பகுதிக்கு வருகை தந்தால் அவரைப்பற்றிய தகவலையும், அருகில் உள்ள நபர்களுக்கு சளி, காய்ச்சல், இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தால் அவர்கள் குறித்த தகவல்களையும் உடனடியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் இயங்கி வரும் கட்டுப்பாட்டு அறைக்கு 04324-1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலோ, அல்லது 04324 – 256306, 04324-255340 ஆகிய தொலைபேசி எண்களிலோ தெரிவிக்க வேண்டும். பொதுமக்களின் நலன் கருதி, கட்டுப்பாட்டு அறைக்கு அளிக்கப்படும் தகவல்கள் உண்மையானதாக இருக்க வேண்டும். தவறான தகவல்களை அளித்தால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளிமாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து கரூா் மாவட்டத்திற்குள் வரும் நபர்கள், எல்லையின் நுழைவு பகுதியில் உள்ள மருத்துவக்குழுவினரிடம் தங்களை பற்றிய முழு விபரங்களையும் புறப்பட்ட இடம் மற்றும் சேரும் இடம் பற்றிய தெளிவான தகவல்களையும் பதிவு செய்து மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். எவரேனும், உரிய அனுமதி இல்லாமலோ, அல்லது மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியாமலோ வெளி மாவட்டம் அல்லது வெளிமாநிலங்களில் இருந்து வந்திருப்பது கண்டறியப்பட்டால் அவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களின் உயிரைக் காப்பாற்ற, கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகத்தோடு மக்களும் இணைந்து செயல்பட்டால்தான் முழுமையாக தொற்றை ஒழிக்க இயலும் என்பதை மனிதில் வைத்து மாவட்ட நிர்வாகம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.